# ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## (தன்னாட்சி)

[பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது]
[தேசியத் தர மதிப்பீட்டு நிறுவனத்தால் 'A' தரம் CGPA of 3.27]
[பல்கலைக்கழக மானியக் குழுவால் 1956 விதிப்படி 2(f) & 12(B) அங்கீகாரம் பெற்றது]

**விக்னேஷ் நகர், காட்டேரி – 636902, H. ஈச்சகம்பாடி (Via)**
**ஊத்தங்கரை (வ), கிருட்டினகிரி (மா) தமிழ்நாடு,**

**Website: www.svmcugi.com E-mail: svmtamildept@gmail.com**


### தமிழாய்வுத்துறை

### முதுகலைத் தமிழ் இலக்கியப் (M.A. Tamil) பாடத்திட்டக் குழுக் கூட்ட அறிக்கை

நாள்: 08.09.2020 (செவ்வாய்க் கிழமை) நேரம் : முற்பகல் 11.30

**Mode: இணையம் (Google Meet)**

முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடத்திட்டக் குழுக் கூட்டம் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) விதிகளின் படி 08.09.2020 செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) தமிழாய்வுத் துறையில் முற்பகல் 11.30 மணியளவில் இணைய வழியில் (Google Meet) நடைபெற்றது. பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### பாடத்திட்டக் குழு

1. முனைவர் க. இராஜா — தலைவர்
   தலைவர், தமிழாய்வுத்துறை
   ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
   காட்டேரி, ஊத்தங்கரை - 636902
   கிருட்டினகிரி, தமிழ்நாடு.

2. முனைவர் தி. பெரியசாமி — பல்கலைக்கழக நியமன உறுப்பினர்
   பேராசிரியர் & தலைவர், தமிழ்த்துறை
   பெரியார் பல்கலைக்கழகம்
   சேலம் - 11, தமிழ்நாடு.

3. முனைவர் உ. அலிபாவா — பாடத்திட்ட வல்லுநர் (மாற்றுப் பல்கலைக்கழகம்)
   பேராசிரியர் & தலைவர், தமிழியல்துறை
   பாரதிதாசன் பல்கலைக்கழகம்
   திருச்சி - 24, தமிழ்நாடு.

4. முனைவர் எஸ். காந்திதுரை — பாடத்திட்ட வல்லுநர் (மாற்றுப் பல்கலைக்கழகம்)
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை – 09, தமிழ்நாடு.

5. கவிஞர் கீரை. பிரபாகரன் — தொழிற்சாலை உறுப்பினர் **(Industrial Person)**
உரிமையாளர்
மோனிகா எண்ணெய் நிறுவனம்
சேலம் - 15, தமிழ்நாடு.

6. லோ. பிரபு — முன்னாள் மாணவப் பிரதிநிரி **(Alumini)**
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காட்டேரி, ஊத்தங்கரை - 636902.
கிருட்டினகிரி, தமிழ்நாடு.

7. முனைவர் பெ. சுரேஷ் — உறுப்பினர்
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காட்டேரி, ஊத்தங்கரை - 636902.
கிருட்டினகிரி, தமிழ்நாடு.

8. முனைவர் ம. இராமச்சந்திரன் — உறுப்பினர்
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காட்டேரி, ஊத்தங்கரை - 636902.
கிருட்டினகிரி, தமிழ்நாடு.

9. கோ. அசோகன் — உறுப்பினர்
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காட்டேரி, ஊத்தங்கரை - 636902.
கிருட்டினகிரி, தமிழ்நாடு.

10. இரா. இராமதுரை — உறுப்பினர்
உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
காட்டேரி, ஊத்தங்கரை - 636902.
கிருட்டினகிரி, தமிழ்நாடு.

11. தி. சிவா உறுப்பினர்

உதவிப்பேராசிரியர்,

ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

காட்டேரி, ஊத்தங்கரை - 636902.

கிருட்டினகிரி, தமிழ்நாடு.

பாடத்திட்டக் குழுத் தலைவர் முனைவர் க. இராஜா, பல்கலைக்கழக நியமன உறுப்பினர், பாடத்திட்ட வல்லுநர்கள், முன்னாள் மாணவப் பிரதிநிதி மற்றும் பாடத்திட்ட உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் பாடத்திட்டம் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

பாடத்திட்டக் குழக் கூட்டத்தில் பாடத்திட்டம் பற்றி ஆலொசிக்கப்பட்டு அதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பின்வருமாறு:

**நிகழ்ச்சி நிரல்**

1. 2020 - 2021 கல்வியாண்டு முதல் நடைமுறைக்குரிய முதுகலைத் தமிழ் இலக்கியப் பாடத்திட்டத்தை இறுதி செய்தல்.
2. பருவத் தேர்வுகள் மற்றும் வினாத்தாள் அமைப்பு முறையைத் தயார் செய்தல்.

**தீர்மானங்கள்**

1. முதன்மைப் பாடங்களான **தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்** ஆகிய தாள்களின் பாடநூல்களாக பல்வேறு பல்கலைக்கழகங்களில் பாடநூலாக உள்ள **பாவலரேறு பாலசுந்தரனார் - ஆராய்ச்சி காண்டிகையுரையைச்** வைக்கலாம் எனப் பாடத்திட்ட வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பட்டது.

2. **இக்கால இலக்கியங்கள்** தாளில் நெஞ்சு பொறுக்குதில்லையே (கவிதைத்தொகுப்பு), நரிப்பல் (சிறுகதைத் தொகுப்பு), ரௌத்திரம் பழகு (நாடகம்) ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றாம் அலகில் **சூல்** நாவல் வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. **சிற்றிலக்கியங்கள்** என்னும் தாளில் பாடத்திட்டத்தைக் குறைத்துப் பாடங்களின் எண்ணிக்கையைச் சேர்க்குமாறு பாடத்திட்டக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி **மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், இராசராசசோழன் உலா, நபிகள்நாயக மான்மிய மஞ்சரி, தண்டலையார் சதகம்** என்னும் பாடங்கள் சேர்க்கப்பட்டன.

4. **உரையாசிரியர்கள்** என்னும் தாளில் இலக்கிய வரிசைப்படி மூன்றாம் அலகு நான்காவதாகவும், நான்காம் அலகு ஐந்தாவதாகவும், ஐந்தாம் அலகு மூன்றாவதாகவும் மாற்றியமைக்கப்பட்டன.

5. **சங்க இலக்கியம்** எனும் தாளில் அலகு ஐந்தில் பத்துப்பாட்டு அகப்புறம் என்பதை மாற்றி எட்டுத்தொகை அகப்புறம் என அமைக்கப்பட்டது. வையைப் பரிபாடல் சேர்க்கப்பட்டது.

6. **உளவியலும் மொழியியலும்** என்னும் தாள் நீக்கப்பட்டுப் **பொது மொழியியல்** தாள் சேர்க்கப்பட்டது.

7. **திட்டக்கட்டுரை** இரண்டு தாள்களாக அமைதல் வேண்டும். அகத்தேர்வாளர் 75 மதிப்பெண்களையும் புறத்தேர்வாளர் 75 மதிப்பெண்களையும் வழங்குவர் (அவற்றில் 50 மதிப்பெண்கள் ஆய்வேட்டிற்கும், 25 மதிப்பெண்கள் வினாக்களுக்கான விடைகளுக்கு வழங்கப்படும்). அகமதிப்பெண்கள் 50 என வரையறுக்கப்பட்டது.

8. பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் பருவத்தேர்வுக்குரிய வினாத்தாள் அமைப்பு முறையில் பின்வரும் அமைப்பு முறையைப் பின்பற்றுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

   - **பகுதி – அ (15 x 1 = 15 மதிப்பெண்கள்).** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் முறையில் 15 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு குறுவினாவிற்கும் 1 மதிப்பெண். பாடத்திட்டத்தில் உள்ள ஐந்து அலகுகளில் ஒவ்வொரு அலகிலிருந்தும் 3 வினாக்கள் கேட்கப்படும் வகையில் வினாக்கள் அமைந்திருக்கும்.

   - **பகுதி – ஆ (3 x 5 = 15 மதிப்பெண்கள்).** ஒவ்வொரு அலகிலிருந்தும் ஒரு வினா வீதம் மொத்தம் 5 வினாக்கள் கேட்கப்படும். எவையேனும் மூன்று வினாக்களுக்கு 150 சொற்களில் விடையளித்திருக்க வேண்டும். ஒரு வினாவிற்கு 5 மதிப்பெண்கள்.

   - **பகுதி – இ (5 x 9 = 45 மதிப்பெண்கள்).** மாற்று விடுவாய்ப்பு முறையில் (இது அல்லது அது முறை) 5 வினாக்கள் கேட்கப்படும். ஒரு வினாவிற்கான விடை 250 சொற்களில் எழுதப்படல் வேண்டும். ஒரு வினாவிற்கு 9 மதிப்பெண்கள். ஒவ்வொரு அலகிலிருந்தும் 2 வினாக்கள் கேட்கப்படும். இவ்விரண்டு வினாக்கள் மாற்று விடுவாய்ப்பு முறையில் அமைக்கப்பட்டிருக்கும்.

9. அக மதிப்பீட்டு மதிப்பெண்கள் (25) பின்வருமாறு அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டது.

   - எழுத்துத் தேர்வு (CIA Test) - 10 மதிப்பெண்கள்
   - கட்டுரை வாசித்தல் - 5 மதிப்பெண்கள்

- ஒப்படைப்பு - 5 மதிப்பெண்கள்
- வருகைப் பதிவேடு - 5 மதிப்பெண்கள்

பல்கலைக்கழக நியமன உறுப்பினர், பாடத்திட்ட வல்லுநர்கள் ஆகியோரின் ஆலோசனைப்படி மேற்கண்ட மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டன. பாடத்திட்டக் குழு பரிந்துரைத்த மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்ட பாடத்திட்டத்தை இறுதிசெய்யப் பரிந்துரைக்கப்படுகிறது.

1. முனைவர் க. இராஜா எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி
தலைவர், தமிழ்த்துறை
ஸ்ரீ வித்யா மந்திர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காட்டேரி, ஊத்தங்கரை
கிருஷ்ணகிரி மாவட்டம்-636 902

2. முனைவர் தி.பெரியசாமி
பேராசிரியர் - தலைவர், தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம்,
பெரியார் பல்கலை நகர்,
சேலம்-636 011.

3. முனைவர். உ. அலிபாவா
பேராசிரியர் & தலைவர்
தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி 620 [illegible]

4.

5.

6.

7.

8.

9.

10.

11.